**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.12/2022**

**வழக்கு சாட்சி PW.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **பார்த்திபராஜன்** | தொழில் | : ஓட்டுநர் (உணவு சேவை ) |
| தகப்பனார் பெயர் | : பாலாஜி | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 26/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 25.05.2026 |

**( எதிரி A2 ஆஜரில் உள்ளார். எதிரி A1 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**முதல் விசாரணை :**

நான் பண்ணைக்காட்டில் வசித்து Swiggy நிறுவனத்தில் பணியாளராக உள்ளேன். வழக்கின் புகார்தாரர் பாலாஜி எனது தந்தை ஆவார். ஆஜர் எதிரியைத் தெரியும், அவர் எனது மாமா மகன் ஆவார். 1ம் எதிரி ரமேஷ் எனது மாமா ஆவார் . கடந்த 22.06.2022ம் தேதி மதியம் சுமார் 02.45 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது எதிரிகள் இருவரும் எங்கள் வீட்டிற்கு வந்து என்னை அடித்தார்கள் . என்னை அடித்துக்கொண்டே எனது அப்பா எங்கே என்று கேட்டார்கள் , அப்போது எனது அப்பா இறப்பு சடங்கிற்கு சென்றுவிட்டு வந்து கொண்டிருந்தார். எதிரிகள் என்னை அடித்துவிட்டு வீட்டை விட்டு வெளியே செல்லும் சமயத்தில் எனது அப்பா வீட்டிற்கு சற்று தள்ளி வந்துகொண்டிருந்தார் . அப்போது எதிரிகள் இருவரும் எனது அப்பாவை தாக்கினார்கள் . அதில் எதிரி பரத்ராஜன் எனது அப்பாவை சாராய பாட்டிலைக் கொண்டு

அப்பாவின் தலையில் அடித்துவிட்டார் . காயமுற்ற எனது தந்தையை பண்ணைக்காடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்று பிறகு தாண்டிக்குடி காவல்நிலையம் எனது தந்தை புகார் கொடுத்தார் . போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**Counsel Mr.M. Murugesan representing the accused A1 and A2 present. Opportunity to cross the witness not availed. Hence cross of PW6 is closed.**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.05.25 15:04:56 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.12/2022**

**வழக்கு சாட்சி PW.7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **வினோத்குமார்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : ஜார்ஜ் ராஜன் | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 34/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 25.05.2026 |

**( எதிரி A2 ஆஜரில் உள்ளார். எதிரி A1 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

<u>முதல் விசாரணை :</u>

நான் பண்ணைக்காட்டில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். அவர்கள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். புகார்தாரர் பாலாஜியைத் தெரியும் . நான் அவர் வீட்டில் தான் குடியிருந்து வருகிறேன் . தேதி நினைவில்லை. சுமார் 4–5 வருடங்களுக்கு முன்பு மதியம் சுமார் 01.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது எங்களது மாடி வீட்டில் உள்ள பாலாஜி வீட்டில் சத்தம் கேட்டது . நான் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரியும் , அவரது அப்பாவும், பாலாஜியும் அவரது மகனும் சண்டை போட்டு விலக்கிக்கொண்டிருந்தார்கள். யார் யாரை தாக்கினார்கள் , எதற்காக சண்டை நடந்தது என்ற விபரம் எனக்குத் தெரியாது . போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேற்சொன்ன விபரத்தை தான் போலீசாரிடம் தெரிவித்தேன்.

**அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

கடந்த 22.06.2021ம் தேதி மதியம் 02.45 மணியளவில் கூச்சலிடும் சத்தம் கேட்டு நானும் , எனது அம்மா இலட்சுமியும் வெளியே வந்து பார்த்தபோது எதிரிகள் பாலாஜி வீட்டின் முன்பு நின்று சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றாலும் , அப்போது எதிரி ரமேஷ் அங்கு வந்த பாலாஜியிடம் ஏன் என் மகன்களை குறவன் என்று சொல்கிற என்று கேட்டதற்கு , பாலாஜி அவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்றுச் சொல்லி வீட்டிற்குள் சென்று விட்டார் என்றாலும் அப்போது எதிரிகள் பாலாஜி வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து பாலாஜியை கைகளால் மாறி மாறி அடித்து வெளியே இழுத்து வந்தார்கள் என்றாலும் , அப்போது எதிரி பரத்ராஜன் , பாலாஜி வீட்டின் அருகே கிடந்த குவாட்டர் பாட்டிலை எடுத்த பாலாஜியின் பின்னந்தலையில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றாலும் , மேலும் எதிரிகள் ரோட்டில் கிடந்த கற்களை எடுத்து பாலாஜி வீட்டின் ஜன்னில் எரிந்து சேதாரம் ஏற்படுத்தினார்கள் என்றாலும் , இச்சம்பவத்தை பார்த்த நான் சண்டையை விலக்கி விட்டேன் என்றால் சரியல்ல . எதிரி கேட்டுக்கொண்டதால் எதிரிக்கு ஆதரவாக வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.05.25 15:05:03 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.12/2022**

**வழக்கு சாட்சி PW.8**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **இலட்சுமி** | தொழில் | : கூலி |
| தகப்பனார் பெயர் | : ------ | கணவர் பெயர் | : ஜார்ஜ் ராஜன் |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 52/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 25.05.2026 |

**( எதிரி A2 ஆஜரில் உள்ளார். எதிரி A1 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**முதல் விசாரணை:**

நான் பண்ணைக்காட்டில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் பாலாஜி வீட்டில் தான் குடியிருந்து வருகிறேன். தேதி நினைவில்லை. ஒரு நாள் மதிய நேரத்திற்கு மேல் பாலாஜி வீட்டிற்கு முன்பு கூட்டமாக சண்டை போடும் சத்தம் கேட்டு நானும் , எனது மகனும் சென்று பார்த்தோம் . கூட்டமாக சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். யார் எதற்காக சண்டை போட்டார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது.

**அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

கடந்த 22.06.2021ம் தேதி மதியம் 02.45 மணியளவில் கூச்சலிடும் சத்தம் கேட்டு நானும் , எனது மகன் வினோத்குமாரும் வெளியே வந்து பார்த்தபோது எதிரிகள் பாலாஜி வீட்டின் முன்பு நின்று சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றாலும், அப்போது எதிரி ரமேஷ் அங்கு வந்த பாலாஜியிடம் ஏன் என் மகன்களை குறவன் என்று சொல்கிற என்று கேட்டதற்கு, பாலாஜி அவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்றுச் சொல்லி வீட்டிற்குள் சென்று விட்டார் என்றாலும் அப்போது எதிரிகள் பாலாஜி வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து பாலாஜியை கைகளால் மாறி மாறி அடித்து வெளியே இழுத்து வந்தார்கள் என்றாலும், அப்போது எதிரி பரத்ராஜன், பாலாஜி வீட்டின் அருகே கிடந்த குவாட்டர் பாட்டிலை எடுத்த பாலாஜியின் பின்னந்தலையில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றாலும், மேலும் எதிரிகள் ரோட்டில் கிடந்த கற்களை எடுத்து பாலாஜி வீட்டின் ஜன்னில் எரிந்து சேதாரம் ஏற்படுத்தினார்கள் என்றாலும், இச்சம்பவத்தை பார்த்த நான் சண்டையை விலக்கி விட்டேன் என்றால் சரியல்ல . எதிரி கேட்டுக்கொண்டதால் எதிரிக்கு ஆதரவாக வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.05.25 15:05:10 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.12/2022**

**வழக்கு சாட்சி PW.9**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **திலீப் குமார்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : பரமேஷ்வரன் | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 70/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 25.05.2026 |

**( எதிரி A2 ஆஜரில் உள்ளார். எதிரி A1 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**முதல் விசாரணை:**

நான் பண்ணைக்காட்டில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல . வழக்கு குறித்து வேறு விபரங்கள் தெரியாது . வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

கடந்த 23.06.2021 ம் தேதி 16.30 மணியளவில் பண்ணைக்காடு ஆலடிப்பட்டி வாழைகிரி ரோட்டில் கமலக்கண்ணன் என்பவரது இடத்தின் அருகே வைத்து நானும் ,

செல்வம் என்பவரும் முன்னிலையாகி இருக்க வழக்கு சம்பவ இடத்தை போலீசார் பார்வையிட்டு வரைபடம் தயார் செய்தார்கள் என்றாலும், அதில் நானும் , செல்வம் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றால் நான் கையொப்பம் செய்யவில்லை.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.05.25 15:05:16 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.